# விலங்குகள்



ஆசிரியர் கையேடு

# Theme Web

## விலங்குகள்

**நம்மைச் சுற்றி வாழும் விலங்குகள்**

ஆடு,மாடு,நாய், பூனை, எருமை, குதிரை, கழுதை, பன்றி.

**விலங்குகளின் வகைகள்**

வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள்

**உணவு பழக்க வழக்கங்கள்**

தாவரங்கள், மற்ற உயிரனங்கள்

**விலங்குகளின் பயன்பாடுகள்**

பால், விவசாயம், பயணம், தோல் பொருட்கள், உணவு.

**விலங்குகளின் சிறப்பம்சங்கள்**

தலை, காது, கால், நகம், கொம்பு, சப்தம், கலர் மற்றும் நடக்கும் விதம், உணவு பழக்க வழக்கங்கள்.

**விலங்குகளின் வாழிடங்கள்**

ஆட்டுக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை, மிருகக் காட்சி சாலை, குகைகள்

**வீட்டு விலங்குகளின் பராமரிப்புகள்**

குளிப்பாட்டுதல், உணவு, தடுப்பூசி, கால்நடை மருத்துவம்.

**விலங்குகளின் பாகங்கள்**

தலை, காதுகள், கால்கள், நகம், கொம்பு


**பாதுகாப்பு**

விலங்குகளுக்குத் தீங்கு செய்யக்கூடாது.


| Component | Day 1 | Day 2 | Day 3 | Day 4 |
|---|---|---|---|---|
| **உரையாடல்** | நம்மைச் சுற்றி வாழும் விலங்குகள் | விலங்குகளின் உணவுப் பழக்க வழக்கங்கள் (Nature Walk) | விலங்குகளின் சிறப்பம்சங்கள | விலங்குகளின் பயன்பாடுகள |
| | Day 5 | Day 6 | Day 7 | Day 8 |
| | விலங்குகளின் வகைகள் | விலங்குகளின் வாழிடங்கள், உடல்பாகங்கள் | விலங்குகளைப் பார்க்கும் இடங்கள்? விலங்குகளின் பராமரிப்பு. | பாதுகாப்பு - விலங்குகளுக்குத் தீங்கு செய்யக்கூடாது. |


ஆசிரியர், குழந்தைகளிடம் விலங்குகளின் படங்களைக் காண்பித்து, இது என்ன விலங்கு, எப்படி இருக்கும் என்று கேட்டு விலங்குகளின் சிறப்பம்சங்கள் பற்றிக் கலந்துரையாடலாம்.

உடல்பாகங்கள் என்ன?
என்ன நிறத்தில் உள்ளன?
எவற்றையெல்லாம் உண்கின்றன?




## விலங்குகளின் பயன்பாடுகள்


வீட்டைப் பாதுகாக்கின்றது


பால் தருகின்றது


பொதி சுமக்கின்றது


ஏர் உழுகின்றது

**விலங்குகளின் பயன்பாடுகள்:**

ஆசிரியர், குழந்தைகளிடம் விலங்குகளின் படங்களை / புத்தகத்தைக் காண்பித்து, நாம் விலங்குகளை எதற்காகவெல்லாம் பயன்படுத்துகின்றோம் என்று கேட்டு விலங்குகளின் பயன்பாடுகள் பற்றி கலந்துரையாடலாம்.

பசு/எருமை மாடுகள் பால், சாணம். காளை மாடுகள் – விவாசாய பணி மற்றும் பயணம். கழுதை – பொதி சுமக்க. வெள்ளாடுகள் /செம்மறி ஆடுகள் – மாமிசம், தோல் பொருட்கள். நாய் – வீட்டைப் பாதுகாக்க. முயல் மற்றும் பூனை – சந்தோசத்திற்காக.

**Sample Questions to ask children:**

பசு மாடு/காளை மாட்டினைத் தோட்டங்களில்/வயல்களில் பார்த்துள்ளீர்களா? அவைகள் அங்கு என்ன செய்து கொண்டிருந்தன?

# விலங்குகளின் உணவு பழக்க வழக்கங்கள்




மாடு புல் மேயும்.



பூனை பால் குடிக்கும்.



நாய் – இறைச்சி சாப்பிடும்



புலி - இறைச்சி சாப்பிடும்

ஒரு சில விலங்குகள் தாவரங்களையும், ஒரு சில விலங்குகள் இறைச்சியையும் உண்கின்றன. ஒரு சில விலங்குகள் இரண்டையுமே உண்கின்றன.

ஆடு, மாடு, எருமை, குதிரை, கழுதை, மான், யானை, வரிக்குதிரை ஆகியவை புற்கள், கொட்டைகள் மற்றும் இலை, தழைகளை உண்கின்றன.

இறைச்சி உண்ணும் விலங்குகள் தங்களை விடச் சிறிய விலங்குகளைப் பிடித்து உண்கின்றன. சிங்கம், புலி, சிறுத்தை ஆகியவை மான் மற்றும் வரிக்குதிரைகளை உண்ணும். பூனை – எலியையும், நரி – முயலையும் உண்கின்றன.

பூனை இறைச்சியும் உண்ணும், பாலும் குடிக்கும். நாய் இறைச்சியும் உண்ணும், சமைத்த தாவர உணவுகளையும் உண்ணும்.

# விலங்குகளைப் பாதுகாத்தல்









விலங்குகளைக் காயப்படுத்தாமல், துன்புறுத்தாமல் அன்பு செலுத்தி, எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது பற்றிப் படங்கள் அல்லது புத்தகத்தைக் காண்பித்து குழந்தைகளிடம் கலந்துரையாடலாம்.

விலங்குகளுக்கு உடல்நல பாதிப்போ அல்லது காயங்களோ ஏற்பட்டால் கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது, விலங்குகளின் இருப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது பற்றிக் குழந்தைகளிடம் கலந்துரையாடலாம்.

| component | Day 1 | Day 2 | Day 3 | Day 4 |
|---|---|---|---|---|
| Songs | **பாடல் – தமிழ்**<br>பவ் பவ் வவ் வவ் வவ்வு ( 2 ) ஆடு மாடு | | | |
| **Activity** | **Day 5** | **Day 6** | **Day 7** | **Day 8** |
| | **Song – English**<br>Ding dong bell, Pussy's in the well. | | | |





## பாடல் – தமிழ்





பவ் பவ் வவ் வவ் வவ்வு ( 2 )
ஆடு மாடு பூனனையெல்லாம்
வீட்டில் இருக்குது,
யானை புலி சிங்கமெல்லாம்
காட்டில் இருக்குது.






பவ் பவ் வவ் வவ் வவ்வு ( 2 )
நாய் குதிரை கழுதையெல்லாம்
வீட்டில் இருக்குது,
குரங்கு நரி மானெல்லாம்
காட்டில் இருக்குது.






பவ் பவ் வவ் வவ் வவ்வு ( 2 )
எருமை பன்றி ஒட்டகமெல்லாம்
வீட்டில் இருக்குது,
கரடி முயல் சிறுத்தையெல்லாம்
காட்டில் இருக்குது.

**Song – English**

Ding, dong, bell, Pussy's in the well.
Who put her in? Little Johnny thin
Who pulled her out? Little Tommy Stout.



**பாட்டின் கருத்தை மாணவர்களுக்குப் புரிய வைத்தல்:**

ஆசிரியர் **பாடலுக்கேற்ற படங்களைக் காட்டி** விளக்கும் பொழுது அர்த்தம் புரிந்துகொண்டு எளிதில் பாடக் கற்றுக் கொள்கின்றனர்.

# Animal Songs

மியாவ் மியாவ் பூனைக்குட்டி

மீசைக்கார பூனைக்குட்டி

சும்மா சும்மா கத்தாதே

சுற்றி சுற்றி வராதே

அம்மா இப்போ வந்திடுவாள்

அன்பாய் பாலை தந்திடுவாள்

மியாவ் மியாவ் சார்

மில்க் குடிக்கிறேன் சார்

நாலு காலு சார்

ஒரு வாலு சார்

மியாவ் மியாவ் சார்

வெள்ளை நிற முயலே ஓடிவா

விளையாட நானும் காத்திருப்பேன்

அங்கும் இங்குமே ஓடாதே

உன்னை பிடிக்கவே முடியாதே

என்ன வேண்டும் சொல்லிடு

என்னிடத்தில் கேட்டிடு

அன்பாக நானும் தந்திடுவேன்

புல்லு மட்டுமே போதுமா !

கேரட் உனக்கு வேண்டாமா !

என்ன வேண்டும் சொல்லிடு

என்னிடத்தில் கேட்டிடு

அன்பாக நானும் தந்திடுவேன்.

யானை யானை அழகர் யானை

அழகரும் சொக்கரும் ஏறும் யானை

கடிக்கரும்பை முறிக்கும் யானை

காவேரி நீரைக் கலக்கும் யானை

குட்டி யானைக்கு கொம்பு முளைக்குதாம்

பட்டினம் எல்லாம் பரந்து ஓடுச்சாம்

(யானை, யானை)

சின்ன பாப்பா பொம்மைக்கு கண் இல்லை
பார்க்க கண் இல்லை

எப்படி பார்க்கும் அது எப்படி பார்க்கும்
பூனையுடைய கண்ணை வைத்து
இப்படி பார்க்கும் அது இப்படி பார்க்கும்.


சின்ன பாப்பா பொம்மைக்கு வாய் இல்லை
உண்ண வாய் இல்லை

எப்படி உண்ணும் அது எப்படி உண்ணும்
யானையுடைய கையை வைத்து
இப்படி உண்ணும் அது இப்படி உண்ணும்

சின்ன பாப்பா பொம்மைக்கு கால் இல்லை
நடக்க கால் இல்லை

எப்படி நடக்கும் அது எப்படி நடக்கும்
ஒட்டகத்தின் காலை வைத்து
இப்படி நடக்கும் அது இப்படி நடக்கும்

| Component | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
|---|---|---|---|---|
| கதை | வானம் கீழே விழுகின்றது - கதை | | | |
| Activity | Day 5 | Day 6 | Day 7 | Day 8 |
| | The Sky is Falling Down – கதை ஆங்கிலத்தில் | | | |






**வானம் கீழே விழுகின்றது - கதை**

ஆசிரியர், கதையிலுள்ள கதாபாத்திரங்களுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு முகபாவனைகள், உடல் அசைவுகள் மற்றும் குரல் ஏற்ற இறக்கங்களுடன் குழந்தைகளுக்குக் கதையைச் சொல்லலாம்.

- முதலில் கதையின் தலைப்பைச் சொல்லலாம்.
- கதையிலுள்ள கதாபத்திரங்களின் படங்களை அல்லது உருவங்களைக் காண்பித்து அறிமுகப்படுத்தலாம்.
- முகபாவனைகள், உடல் அசைவுகள் மற்றும் குரல் ஏற்ற இறக்கங்களுடன் குழந்தைகளுக்குக் கதையைச் சொல்ல ஆரம்பிக்கலாம்.



| செயல்பாடுகள் | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
|---|---|---|---|---|
| விளையாட்டுகள் | சங்கிலி புங்கிலி ஆட்டம் | விலங்குகளின் முகமுடி அணிந்து நடித்தல் | மீன் பிடித்தல் | மீன் பிடித்தல் |
| **செயல்பாடுகள்** | **Day-5** | **Day-6** | **Day-7** | **Day-8** |
| | வளையத்திலிருந்து பந்து எறிதல் | கூடைக்குள் பந்து எறிதல் | கூடைக்குள் பந்து எறிதல் | தொகுத்து வழங்குதல் |

**விலங்குகளின் முகமுடி அணிந்து நடித்தல்:**

- குழந்தைகளைத் தங்களுக்குப் பிடித்த விலங்குகளின் முகமுடிகளை அணிந்து கொள்ளச் செய்யது வட்டமாக நிற்க வைக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழந்தைகளும் தாங்கள் அணித்திருக்கும் முகமுடியின் பெயர்களைச் சொல்ல வைக்கலாம். தங்களுக்கு ஏன் அந்த விலங்கு பிடிக்கும் என்று கேட்கலாம்.
- ஆசிரியர் ஏதேனும் விலங்கின் பெயரைச் சொல்லும் பொழுது அந்த விலங்கின் முகமுடியை அணிந்துள்ள குழந்தைகள் வட்டத்தினுள் வந்து விலங்கைப் போன்று சத்தமோ அல்லது நடந்தோ செய்கைகள் காண்பிக்க வேண்டும்.
- ஆசிரியரும் தங்களுக்குப் பிடித்த விலங்கின் முகமுடியை அணிவது நன்று.





**வளையங்களுக்குள் நுழைதல் / தடைகளைத் தாண்டுதல்**

- 2 அல்லது 3 குழந்தைகளை வளையங்களைத் தாழ்த்தி பிடிக்கச் செய்து அதனுள் ஒவ்வொரு குழந்தையாக நுழைந்து வரச் செய்யலாம். இதற்கிடையில் 4 வயது குழந்தைகளைச் செங்கல்களின் மீது நடந்து வந்தும் தாண்டச் செய்யலாம்.
- ஆரம்பத்தில் ஆர்வமுள்ள குழந்தைகளைச் செய்ய வைக்கலாம். பின்பு ஒவ்வொரு குழந்தையாக ஊக்கப்படுத்தலாம்.
- அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும்.
- நன்கு செயல்படும் குழந்தைகளை ஊக்கப்படுத்தும் விதமாக அளவு குறைந்த வளையங்களிலும் நுழைந்து வரச் செய்யலாம்.

| செயல்பாடுகள் | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
|---|---|---|---|---|
| படைப்பாற்றல் **செயல்பாடுகள்** | விருப்பம் போல வரைதல் | விலங்குகளை வரைதல் | பொருட்களின் வெளித்தோற்றத்தை வரைதல் | காகிதப் படம் வெட்டி ஒட்டுதல். |
| | Day 5 | Day 6 | Day 7 | Day 8 |
| | களிமண் உருவங்கள் செய்தல். | பனை ஓலை (அ) விரல்களில் அச்சிடுவது | கலர் பென்சிலில் பொருட்களின் வெளித்தோற்றத்தை வரைதல் | தொகுத்து வழங்குதல். |


### பொருட்களின் வெளித்தோற்றத்தை வரைதல்

குழந்தைளைத் தங்களிடம் உள்ள ஏதேனும் ஒரு பொருளை எடுக்கச் செய்து ஒரு கையில் பொருளைப் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் பென்சில் அல்லது பேனாவை வைத்தும் அவற்றின் உருவத்தைச் சுற்றி வரையச் செய்யலாம்.

L.K.G குழந்தைகளுக்குப் பெரிய பொருட்களைக் கொடுத்து வரையச் செய்யலாம். தட்டு, டம்ளர், டப்பா.

U.K.G குழந்தைகளுக்குச் சற்று சிறிதான பொருட்களைக் கொடுக்கலாம். (வளையல், மணிகள், பாட்டில் மூடி)





### காகிதப் படம் வெட்டி ஒட்டுதல்

வகுப்பிலுள்ள U.K.G மற்றும் L.K.G மாணவர்ளைக் கலந்து 4 அல்லது 5 குழுக்களாகப் பிரித்து உட்கார வைக்கலாம்.

விலங்குகளின் படங்கள் இருக்கும் பழைய செய்தித்தாள்களை மாணவர்களிடம் கொடுத்து வெட்டவோ/ கிழிக்க செய்து வரைபடத்தாளில் ஒட்ட வைக்கலாம்.

U.K.G மாணவர்களை விலங்குகளின் படங்களைக் கிழிக்க வைக்கலாம்.

U.K.G மற்றும் L.K.G மாணவர்கள் இணைந்து பசை தடவி ஒட்டுமாறு அறிவுறுத்தலாம்.



| Activity | Day-1 | Day-2 | Day-3 | Day-4 |
|---|---|---|---|---|
| பள்ளிக்குத் தயார் படுத்துதல் | எண்களை எண்ணுதல் | 3 + - 1 to 5<br>4 + - 1 to 7 | முதல், கடைசி கருத்தை அறிமுகப்படுத்துதல் | முதல், கடைசி |
| | Day-5 | Day-6 | Day-7 | Day-8 |
| | வீடு/ காட்டு விலங்குகள் – வகைப்பாடு | முதல், கடைசி, நடுவில் | ஒலி மற்றும் சொற்கள் | தொகுத்து வழங்குதல் |


**விலங்குகளை வகைப்படுத்துதல்**

- ஆசிரியர், வீட்டு மற்றும் காட்டு விலங்குகளின் படங்களை அட்டையில் ஒட்டி பட அட்டைகளைத் தயார்செய்து கொள்ளலாம்.
- பின்பு அனைத்துப் படங்களின் பின்பும் ஊசிகளைக் குத்தியோ அல்லது ஒட்டியோ வைத்துக் கொள்ளலாம்.
- நீண்ட நூலின் ஒரு முனையில் சிறிய காந்தம் ஒன்றையும் மற்றொரு முனையில் குச்சியையும் கட்டவும்.
- மாணவர்கள் அனைவரையும் வட்டமாக உட்கார வைத்து நடுவில் ஒரு சிறிய வட்டம் வரையவும்.
- வட்டத்திற்குள் அனைத்து வீட்டு மற்றும் காட்டு விலங்குகளின் படங்களையும் கலந்து வைக்கவும்.
- ஒவ்வொரு மாணவராக அழைத்து நூல் கட்டியிருக்கும் குச்சியை கையில் கொடுத்து, ஏதேனும் ஒரு விலங்கின் படத்தை எடுக்கச் சொல்லவும்.

(பட அட்டையின் பின்னால் ஊசியும், நூலின் முனையில் காந்தமும் இருப்பதால் ஒட்டிக்கொள்ளும்.)

- மாணவர்கள் தங்களின் நுண்தசை உதவியால் குச்சியைப் பிடித்து படத்தை எடுக்க வேண்டும்






**முதல், கடைசி கருத்தை அறிமுகப்படுத்துதல்**

குழந்தைகளை வரிசையாக நிற்க வைத்து, யார் முதலில் நிற்கின்றனர்? யார் கடைசியில் நிற்கின்றனர்? என்று கேட்கலாம்.


கற்களையோ அல்லது ஏதேனும் பொருட்களையோ குழந்தைகளை வரிசைப்படுத்தச் சொல்லி எது முதலில் உள்ளது? எது கடைசியில் உள்ளது என்று கேட்கலாம்.

ஒவ்வொரு குழந்தையாக அழைத்து எந்த பொருள் முதல் மற்றும் கடைசியில் உள்ளது என்று கைவைத்து காண்பிக்கச் சொல்லலாம்.


:

**பயிற்சித் தாள் - எண்களை எண்ணுதல்**

- கொடுக்கப்பட்டிருக்கும் ஒட்டகச் சிவிங்கியின் படத்தையும், வண்ணப் பொட்டுகளையும் மாணவர்களிடம் கொடுக்கவும்.
- விலங்கின் மேல் வட்டமாக இருக்கும் பகுதிகளில் பொட்டுகளை ஒட்டச் சொல்லலாம்.
- பொட்டுகள் ஒட்டிய பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் வண்ணம் தீட்ட வைக்கலாம்.
- மாணவர்கள் ஒட்டியிருக்கும் பொட்டுகளை எண்ண வைத்து கீழே கொடுத்திருக்கும் கட்டத்தில் எழுதச் சொல்லலாம்.
- L.K.G மாணவர்களை எண்ணிகையை மட்டும் கூறச் சொல்லலாம்.



## வண்ணம் தீட்டுதல்



areddy